முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 தேதி.16.10.2023

| MCOP. No. | 163/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | சௌதரராஜன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

இந்த விபத்து நான் இருசக்கர வாகனத்தில் இருந்து தரையில் இறங்கிய போது எதிரே வந்த வாகனம் மோதிவிட்டது. எனது அண்ணின் வாகனம் தான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரிதான். எனது மீது மோதிய வாகனம் பல்சர் வாகனம் ஆகும். மேற்படி வாகனத்தின் ஒட்டுநர் ராஜேஷ் என்பவர் மீது தான் வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜேஷ் என்பவர் ஒட்டிய வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்றால் சரிதான். அது மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன் உரிமையாளர் விஸ்வநாதன் என்றால் சரிதான். எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் விஸ்வநாதன் மற்றும் ஒட்டுநர் ராஜேஷ்–ம் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். என் அண்ணன் துரைராஜ் மீது தவறு இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரிதான். எனது, வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காட்ட கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீ ம சா ஆ 1ல் எனக்கு எந்த வகையில் ஊனத்தின் சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.